செ.வெ.எண்.41 நாள் : 19.03.2021

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் இதுவரை தேர்தல்நடத்தை விதிமுறைகளை பின்பற்றாமல் உரிய ஆவணங்களின்றி எடுத்து சென்ற ரூ.5.045 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிகளை முறையாக கடைப்பிடித்திடவும், விதிமீறல்களை தடுத்திடவும், பல்வேறு பகுதிகளில் பறக்கும்படை குழுவினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் தேர்தல் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டு 24 மணிநேரமும் 18004256322, 1950 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்கள் மூலமாகவும், 04329-296320, 296321, 296322, 296323 ஆகிய தொலைபேசி எண்கள் மூலமாகவும் 8489551950 என்ற வாட்ஸ்ஆப் எண் மூலமாவும் புகார்களை cVIGIL என்ற செயலி மூலமாக பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மூலம் அரியலூர் சட்டப்பேரவைத் தொகுதியில் இதுவரை 6 புகார்களும், ஜெயங்கொண்டம் சட்டப்பேரவைத் தொகுதியில் 1 புகாரும் பெறப்பட்டு உரிய முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. பறக்கும் படையினர் மற்றும் நில கண்காணிப்பு குழுக்களின் மூலமாக உரிய ஆவணங்களின்றி கார் மற்றும் இருசக்கர வாகனங்களில் எடுத்துச் சென்ற 6 நபர்களிடமிருந்து ரூ.5,04,45,660 மற்றும் 2 நபர்களிடமிருந்து 3200 குக்கர்களும் மற்றும் ஒரு நபரிடமிருந்து 122 பட்டுப்புடவைகளும், 2 பட்டு வேட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**